# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**<u>ஆணை நாள் – 02.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.CP.5899/F/2024</u>**

திரு M. சுகுமார் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
தெள்ளார், திருவண்ணாமலை மாவட்டம் - 604 406. -- பொது அதிகார அமைப்பு

<u>பார்வை:</u>

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 25.10.2024 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 20.11.2024 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 07.12.2024 |

****

**<u>ஆணை</u>**

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திரு M. சுகுமார் என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு K. சுகுமாறன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொ), வட்டார வளர்ச்சி அலுவலகம், தெள்ளார், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் வட்டார வளர்ச்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தெள்ளார் கிராம ஊராட்சியில் PMAY (G) திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் பற்றிய விவரம், வீடுகட்ட வழங்கப்பட்ட பணி ஆணை, தீர்மானம், பயனாளிகளுக்கு நிதி விடுவிக்கப்பட்ட ஆவணங்கள், எம்.புக், வீடு அமைந்துள்ள சர்வே எண், NREGA Mandates போன்ற

ஆவணங்களின் நகல்கள், தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 61 கிராம ஊராட்சியில் KVVT, NEW HUT SURVEY, HOUSE FOR ALL திட்டத்தில் உள்ள பயனாளிகள் விவரம், தேர்வு செய்யப்பட்டோர் பட்டியல், காத்திருப்போர் பட்டியல் பற்றிய விவரம் மற்றும் மேற்படி தொடர்பான ஆவணங்களை பார்வையிட அனுமதி உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 19 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் புகார் மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரியுள்ள தகவல்களில் இனம் 2 முதல் 15 வரை உள்ள தகவல்கள் குறித்து தங்கள் அலுவலகத்தில் ஆவணங்களை நேரில் பார்வையிட்டு பெற்றுக்கொண்டார் என்றும் அத்தவல்களில் மனுதாரர் மனநிறைவு அடைந்ததாகவும் எனத் தெரிவித்து, அவரது எழுத்துப்பூர்வமான 07.01.2025 தேதியிட்ட கடித நகலினையும் இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- ***மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள இனங்களான-1, 16, 17, 18 & 19 ஆகியவை தங்கள் அலுவலகத்தில் இல்லாத பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெற்று மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாக தயாரித்து <u>30.04.2025</u> அன்று நேரில் ஆஜராகி இவ்வாணையத்தில் சமர்ப்பிக்குமாறு திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் வட்டார வளர்ச்சி அலுவலகம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP.5899/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
தெள்ளார், திருவண்ணாமலை மாவட்டம் - 604 406.

<u>**வழக்கு எண்.CP.5899/F/2024**</u>

<u>**மனுதாரர்**</u>

திரு M. சுகுமார், த/பெ. மணி,
வந்தவாசி நீதிமன்றம்,
வந்தவாசி (வட்டம்),
திருவண்ணாமலை மாவட்டம் - 604 408.

Copy to: File
SNPS / 11.04.2025